# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்

Volume: 15 | Issue : 04 | JULY 2026 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE







அவோ! மிளோ!! ஹொடோ!!!

# SITCON

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

2026

## Exhibition

07 | 08 | 09

AUGUST 2026

09.30AM to 09.00PM

**Arunachalam Kamalambal Hall A/C**

## Conference

15 | 16

AUGUST 2026

04.00PM to 10PM & 09.00AM to 09.30PM

**Tamilnadu Chamber of Commerce Hatsun Hall A/C**

## Madurai RUN

09

AUGUST 2026

06.00AM

**Madurai Gandhi Museum Ground**

BOOK POST

To

METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

# மெட்ரோ ஷூ மார்ட்



16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343





# JaiGenga Uniforms जेयगंगा यूनिफाम

133-A, East Masi Street, 4 Feet Lane, Madurai - 625 001.
Email : jaigenga@gmail.com | Website : www.jaigenga.com
89035 34438, 887059 4105 ESTD : 1968

Mfrs. Hospital Dress Material & Uniform, School & College Lab Coats, Aprons Industrial Uniform, Hotel Industry Uniform, Pharmaceuticals Drugs Mfrs. Dress Wears






ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST


OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

# Prof. Dr. M.V. SUBBURAMAN

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com



*Ananda Nilayam*

# Mayflower

*The Banquet Hall A/C*

| | | |
|---|---|---|
| Marriage Function | Betrothal | Naming Ceremony |
| Birthday Party | Puberty | Get-to-gether |

*Hall available for all type of functions*

Location - Google Map

Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001

For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583

# தலைவர் அறிக்கை

## அஸ்கிதெங்கோ மொன்னு பொறெ

## நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

சிட்கான் 2026 - ஸௌராஷ்ட்ர தொழில் வர்த்தக மாநாடு மற்றும் கண்காட்சி வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெற இருக்கின்றன. இந்த மாநாடு 2011 முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் நடத்தி வருவது அனைவரும் அறிந்ததே. தற்போது 8வது முறையாக நடத்தப்படுகிறது. சேம்பர் துணைத் தலைவர் திரு. கே.கே. குபேந்திரன் அவர்கள் இந்த மாநாட்டிற்கு தலைமை வகிக்கிறார்.

இந்த சிட்கான் மாநாடு மற்றும் கண்காட்சியின் நோக்கம், நம் சமூக தொழில் முனைவோர்களை ஒருங்கிணைக்கவும், புதிய தயாரிப்புகள், முயற்சிகளை பொது மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கும், நம் மக்கள் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்வது போன்ற நோக்கங்களின் அடிப்படையில் நடத்தப்படுகிறது.

இந்த மாநாடு, இரண்டு நிகழ்வுகளாக நடைபெறுகின்றன. அதன்படி, முதலாவதாக, ஆகஸ்ட் 7,8 & 9 (வெள்ளி, சனி & ஞாயிறு) ஆகிய மூன்று நாட்கள் அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கில் வெகு விமரிசையாக நடைபெற இருக்கின்றது. 70க்கும் மேற்பட்ட ஸ்டால்கள் பங்குகொள்கின்றன. இதில், பொதுமக்கள் விரும்பும் பொருட்கள் தயாரிப்பு விலைக்கே விற்கும் ஸ்டால்கள், B2B ஸ்டால்கள், சேவை சார்ந்த ஸ்டால்கள் என பல்வேறு தரப்பட்ட ஸ்டால்கள் இடம்பெறுகின்றன. அங்கத்தினர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் குடும்பத்துடன் இதில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

அடுத்ததாக, ஆகஸ்ட் 15 & 16 ஆகிய இரண்டு நாட்கள், தொழில் வர்த்தக கருத்தரங்குகள், தமிழ்நாடு தொழில் வர்த்தக அரங்கில் நடைபெற இருக்கின்றன. இதில், முன்னோடி தொழில் முனைவோர்கள், சிறப்புப் பேச்சாளர்கள், அமைச்சர்கள், பிரபலங்கள் என பலர் பங்கேற்க இருக்கிறார்கள். அன்றைய தினம், சிட்கான் மலர் வெளியீடு செய்யப்படுகிறது. இரண்டு நிகழ்விலும், வருகை தருபவர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படயிருக்கின்றன.

மேற்படி இரண்டு நிகழ்ச்சிகளோடு, மூன்றாவதாக, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர், ஸௌராஷ்ட்ர நெக்ஸ்ட் ஜென் அமைப்புடன் இணைந்து ஆகஸ்ட் 9ம் தேதி காலை 5 மணிக்கு காந்தி மியூசியத்தில் மினி மாரத்தான் போட்டி **க்ளீன் மதுரை** என்ற கோட்பாடுடன் நடத்த இருக்கிறது. இதில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கலந்து கொள்ளலாம். வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகளும், விருதுகளும் உண்டு.

அனைவரும் கலந்து கொண்டு ஆதரவு தர அன்புடன் அழைக்கின்றோம். நன்றி.


## SOURASHTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. **குமரேஷ் பாபு**

**17.06.2026** – மதுரை மாவட்ட தொழில் மையம் சார்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கான சிறப்புக் கூட்டம் கடந்த ஜூன் 17ம் தேதி அன்று மதுரை மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், நமது சேம்பர் சார்பாக, தலைவர் திரு. K.K. தினேஷ் மற்றும் அரசு தொடர்பு குழு ஒருங்கிணைப்பாளர் திரு. N.S. பிரேம் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். கோரிக்கையும் அளித்தனர்.

**30.06.2026** – ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் 11வது செயற்குழு கூட்டம் மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இதில் சேம்பர் செயற்குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**04.07.2026** – தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSMEs), டான்ஜெட்கோ (TANGEDCO) விதிமுறைகளின் கீழ் சந்திக்கும் தற்போதைய செயல்பாட்டு சிக்கல்கள் குறித்து ஸௌராஷ்டிர சேம்பர் நிர்வாகிகள் தமிழக மின்சாரத் துறை அமைச்சர் திரு. C.T.R. நிர்மல் குமார் அவர்களை நேரில் சந்தித்து மனு அளித்தனர்.

**07.07.2026** – ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் ஜூலை மாத தொழில் வர்த்தக நிகழ்ச்சி, அறிவுசார் சொத்துரிமை பிரச்சனைகளை தீர்க்கும் வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு என்கிற தலைப்பில் மாலை 6 மணிக்கு சேம்பர் – மேஃபிளவர் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது குறித்து விளக்கமளிக்க, சிறப்பு விருந்தினராக வணிகச் சட்ட வழக்கறிஞர் திரு. அறிவழகன் அருள் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அவரைத் தொடர்ந்து, வங்கியும் வணிகர் நலனும் என்கிற தலைப்பில் இரண்டாவது நிகழ்ச்சி நடைபெற்றது. இது குறித்துப் பேச, கௌரவ விருந்தினராக இக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியின் கிளை மேலாளர் திரு. எம். சூரிய வீரபத்திரன் அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

வருகின்ற ஆகஸ்ட் மாதம் 7, 8 & 9 ஆகிய மூன்று நாட்கள் அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கில் சிட்கான் 2026 தொழில் வர்த்தக கண்காட்சியும், ஆகஸ்ட் 15 & 16 ஆகிய இரண்டு நாட்கள் தமிழ்நாடு தொழில் வர்த்தக கண்காட்சியில் சிட்கான் தொழில் வர்த்தக கருத்தருங்குகள் நடைபெற இருக்கின்றன. அங்கத்தினர்கள் அனைவரும் கண்காட்சிக்கு குடும்பத்துடன் கலந்து கொள்ள அழைக்கிறோம். மாநாட்டு தொழில் வர்த்தக கருத்தரங்கிற்கு நம் சமூக தொழில்முனைவோர்கள் கலந்து கொண்டு பயன்பெற அழைக்கிறோம்.



# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. **விக்னேஷ் பாபு**

சிட்கான் 2026 மாநாட்டில், நமது லாப் ஸமாச்சார் குழு சிட்கான் மலர் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. பலர் விளம்பர உதவியும், கட்டுரைகளையும் தந்து உதவியுள்ளனர். அதற்கு குழுவின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த இதழ், ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி மாலையில் தமிழ்நாடு தொழில் வர்த்தக அரங்கில் நடைபெறும் துவக்க விழாவில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. ஆயிரம் பிரதிகள், இருநூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்கள், பயனுள்ள தகவல்களுடன் இந்த மலரை வெளியிடும் முயற்சியில் நமது குழு ஈடுபட்டுள்ளது.

அவசியம், இந்த மலரை, நம் சேம்பர் உறுப்பினர்கள் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். தவறும் பட்சத்தில், தபால் மூலமாக தங்களுக்கு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாபெரும் மாநாட்டில் கலந்துகொள்ள அங்கத்தினர்கள் அனைவரையும் வருக... வருக... என்புடன் அழைக்கிறோம். நன்றி.







BVK GROUP

# BVK Foundation

*Proudly presents*



Shri. **Bala V Kutti**
Founder & Chairman
BVK Group of Companies

# 8th BVK Awards

## Sourashtrian Global Achievers Award



Venue :
TN Chamber of Commerce Hall,
Kamarajar Salai, Madurai.
August 16, Sunday 2026
(5 PM Onwards)

அவோ! மிளோ!! ஹொடோ!!!

SITCON
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE
2026



தமிழ் இளவல்
மதுரை **வெ.இராமகிருஷ்ணன்**
Speaker

# தமிழக தொழில்துறையினர் சந்திக்கும் மின் பிரச்சனை

## மின்சாரத்துறை அமைச்சரை சந்தித்து சௌ. சேம்பர் அளித்த கோரிக்கை மனு




குறு மற்றும் சிறு தொழில்களுக்கான எல்.டி தொழில்முறை மின்சாரப் பயன்பாட்டு (LT Industrial Service - Tariff III B) உச்ச வரம்பை 150 வறி-லிருந்து 200 வறி ஆக உயர்த்தவும், எல்.டி நுகர்வோர்கள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை (Renewable Energy) பயன்படுத்தவும், கடத்தவும் (Wheeling) அனுமதிக்குமாறு தமிழக அரசு மற்றும் TNERC அமைப்பிடம் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கோரிக்கையளித்தது.

தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSMEs), டான்ஜெட்கோ (TANGEDCO) விதிமுறைகளின் கீழ் சந்திக்கும் தற்போதைய செயல்பாட்டு சிக்கல்கள் குறித்து ஸௌராஷ்டிர சேம்பர் நிர்வாகிகள் தமிழக மின்சாரத் துறை அமைச்சர் திரு. C.T.R. நிர்மல் குமார் அவர்களை நேரில் சந்தித்து மனு அளித்தனர். அதன் விபரம் கீழ்வருமாறு...

"முந்தைய கோரிக்கைகளுக்குப் பிறகு, TNERC விநியோகக் குறியீட்டைத் திருத்தி, குறைந்த அழுத்த (LT/LTCT) இணைப்புகளுக்கான உச்ச வரம்பை 150 kW ஆக நிர்ணயித்தது. நவீன சிஎன்சி (CNC) இயந்திரங்கள் மற்றும் ஆட்டோமேஷன் காரணமாக, பல சிறுதொழில் நிறுவனங்களின் (மத்திய MSME அமைச்சகத்தின்படி ரூ.50 கோடி வரை விற்றுமுதல் கொண்டவை) மின்தேவை 170-200 kW ஆக உயர்ந்துள்ளது. இதனால், இந்த நிறுவனங்கள் உயர் அழுத்த (HT) இணைப்பிற்கு மாற கட்டாயப்படுத்தப்படுவதால், ரூ.15-25 லட்சம் வரை ஆரம்பக்கட்ட மூலதன முதலீடு தேவைப்படுகிறது. மேலும், மிக அதிக நிலையான கட்டணங்களை (Fixed Charges) செலுத்த வேண்டியுள்ளது.

கேரளா போன்ற அண்டை மாநிலங்களில் (KSEB) எல்.டி இணைப்புகள் 200 kW வரை அனுமதிக்கப்படுவதை இச்சபை சுட்டிக்காட்டுகிறது. இது சிறுதொழில்களை அதிக உள்கட்டமைப்புச் செலவுகளிலிருந்து பாதுகாக்கும் ஒரு வெற்றிகரமான மாதிரியாகும். தற்போது HT நுகர்வோருக்கு மட்டுமே உள்ள Open Access மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கடத்தல் (Wheeling) வசதிகளை LT நுகர்வோருக்கும் வழங்குவது, தமிழக அரசின் பசுமை ஆற்றல் இலக்குகளை அடைய டான்ஜெட்கோவிற்கு உதவும்.

இக்கொள்கை மாற்றங்களுக்காகக் காத்திருக்கும் வேளையில், சிறுதொழில் நிறுவனங்கள் தங்களின் தற்போதைய மின் பயன்பாடு மற்றும் சுமை விவரங்களை இந்த அதிகாரப்பூர்வ தளங்கள் மூலம் சரிபார்க்கலாம்:

மேற்கூறிய உண்மைகளைக் கருத்தில் கொண்டும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSMEs) 'தொழில் செய்வதை எளிதாக்கும்' (Ease of Doing Business) கொள்கையை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழக அரசிடம் நாங்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கிறோம்:

- உத்யம் (Udyam) பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டு, ரூ.50 கோடி வரை விற்றுமுதல் (Turnover) கொண்ட சிறுதொழில் நிறுவனங்களுக்கு, குறைந்த அழுத்த மின்சாரப் பயன்பாட்டு (LT III B) உச்ச வரம்பை 150 வறி-லிருந்து 200 வறி ஆக உயர்த்த வேண்டும்.
- இதற்கு ஏதுவாக, தமிழ்நாடு மின்சார விநியோகக் குறியீடு (Tamil Nadu Electricity Supply Code) மற்றும் மின் கட்டண உத்தரவில் (Tariff Order) தகுந்த திருத்தங்களை மேற்கொள்ளுமாறு TNERC மற்றும் டான்ஜெட்கோ (TANGEDCO) அமைப்புகளுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும்.
- தற்போது உயர் அழுத்த (HT) நுகர்வோருக்கு வழங்கப்பட்டு வருவது போல, குறைந்த அழுத்த மற்றும் சிடி (LT & CT) நுகர்வோர்களும் தங்கள் சொந்த காற்றாலைகள் மற்றும் மூன்றாம் தரப்பு (Third-party) சூரியசக்தி திட்டங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.
- குறைந்த அழுத்த மற்றும் சிடி (LT & CT) நுகர்வோர்களும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கடத்தல் (Renewable Energy Wheeling) வசதிகளைப் பெற ஏதுவாக, டான்ஜெட்கோவிற்கு உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். இது பசுமை ஆற்றல் உற்பத்தியில் முதலீடு செய்ய MSME-களை ஊக்குவிப்பதோடு, மாநிலத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்குகளை அடையவும் பங்களிக்கும்.
- இந்த நடவடிக்கைகள் ஜிநீனிசி துறையை வலுப்படுத்தும், நிலையான உற்பத்தியை (Sustainable Manufacturing) ஊக்குவிக்கும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான முயற்சிகளுக்குப் பக்கபலமாக அமையும்.

**மாநிலத்திற்கும் தொழில்துறைக்கும் கிடைக்கும் நன்மைகள்** (Benefits to State & Industries)

தமிழ்நாட்டில் உள்ள 25,000-க்கும் மேற்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள் இதன் மூலம் நேரடியாகப் பயனடையும். HT இணைப்பிற்கு மாறும் நிதிச்சுமை தவிர்க்கப்படுவதால், ஒவ்வொரு நிறுவனமும் தங்களின் 10-15 தொழிலாளர்களின் வேலைவாய்ப்பைத் தக்க வைத்துக் கொள்ள முடியும். டான்ஜெட்கோவிற்கு வருவாய் இழப்பில்லை (Revenue Neutral): LT III B பிரிவின் மின் கட்டணம், HT IA பிரிவை விட அதிகமாகும். எனவே, மின்வாரியத்திற்கு எந்தவித வருவாய் இழப்பும் ஏற்படாது. மின் தேவையை ஒன்றிணைத்தல் (Clubbing of loads) மற்றும் அனுமதியின்றி மின்சாரத்தை நீட்டித்தல் (Unauthorized load extensions) தொடர்பான தகராறுகளையும் வழக்குகளையும் இது முற்றிலும் தவிர்க்கும்.

எனவே, தாங்கள் இதில் கனிவுடன் தலையிட்டு, இக்கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, வரவிருக்கும் MSME கொள்கை அல்லது சட்டமன்றக் கூட்டத்தொடரில் இதற்கான அறிவிப்பை வெளியிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு எங்களது முழு ஒத்துழைப்பை இத்தருணத்தில் உறுதி அளிக்கிறோம்".

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டன.

# News from Metrology Deparment

## வர்த்தகம் செய்வதை எளிதாக்குவது, நம்பிக்கை சார்ந்த நிர்வாக நடைமுறைகளை ஊக்குவிக்கும் வகையிலான முக்கிய சீர்திருத்த நடவடிக்கைகள்

ஜன் விஸ்வாஸ் (விதிமுறைகள் திருத்தச்) சட்டம், மூலம், அளவியல் சட்டத்தின் கீழ் மேம்பாட்டு வழிமுறைகள் குறித்த நடைமுறைகளை, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த புதிய வழிமுறையின் கீழ், முதன்முறையாக ஒழுங்குமுறை அல்லது இணக்க நடைமுறை மீறல்களில் ஈடுபடும் வர்த்தக நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்பு, அத்தகைய விதிமுறைகளில் உள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். இந்த சீர்திருத்தம் நுகர்வோர் பாதுகாப்பை பராமரிப்பதுடன், தன்னார்வ அடிப்படையில் இணக்க நடைமுறைகளை முறையாக வர்த்தக நிறுவனங்கள் செயல்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் உதவிடும்.

மேலும் இதுபோன்ற விதிமுறைகள், தேவையற்ற வழக்குகள் பதிவுசெய்யப்படுவதை குறைப்பதுடன், நம்பிக்கை அடிப்படையிலான ஒழுங்குமுறை விதிகளுடன் கூடிய கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம், எளிதாக வர்த்தகம் செய்வதற்கான நடைமுறைகளை ஊக்குவிக்க உதவுகிறது.

இந்த சீர்திருத்த நடவடிக்கை உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், சிப்பம் கட்டும் பணி செய்பவர்கள், விநியோகஸ்தர்கள், பழுதுநீக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், வர்த்தகர்கள், எம்எஸ்எம்இ நிறுவனங்கள், இதர ஒழுங்குபடுத்தப்பட்ட முறைசார்ந்த நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

மோசடி, தொடர்ச்சியான விதிமீறல்கள், முறைகேடுகள், நுகர்வோர் நலனை பாதிக்கும் செயல்கள் ஆகியவற்றுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் தொடரும்.

நுகர்வோர் நலன்களை பாதுகாப்பதுடன் நம்பிக்கை சார்ந்த நிர்வாக நடைமுறைகளை வலுப்படுத்துவதே இந்த சீர்திருத்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும்.

சட்டமுறை அளவியல் சட்டத்தின் கீழ், விதிமீறல்களில் ஈடுபடும் வர்த்தக நிறுவனத்தைக் கண்டறிந்து அதன் குறைபாடுகளை சரிசெய்வதற்கான கால அவகாசத்தை அளிப்பதற்கான மேம்பாட்டு அறிவிக்கையை வழங்க சட்டமுறை அளவியல் அதிகாரிக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனம் பரிந்துரைக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் தங்களது விதிமீறல்களை சரிசெய்துகொள்ள இணங்குவதன் மூலம் தேவையற்ற தண்டனை நடவடிக்கைகள், வழக்குகளை தவிர்ப்பதற்கும் இது உதவிடும். எனினும் சட்டமுறை அளவியல் அதிகாரியின் மேம்பாட்டு அறிவிக்கைக்கு இணங்கத் தவறினால் அல்லது மீண்டும் மீண்டும் விதிமீறல்களில் ஈடுபடும் நிறுவனங்கள் மீது சட்டமுறை அளவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும் வகை செய்கிறது.

## தொழில் வளர்ச்சி பெற என்ன செய்ய வேண்டும்?

ஒரு தொழில் வளர்ச்சி பெற, வாடிக்கையாளர்களின் தேவையைத் துல்லியமாகப் புரிந்துகொண்டு தரமான சேவையை வழங்குவது அவசியம். அதனுடன் புதிய சந்தை வாய்ப்புகளை ஆராய்தல், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் மற்றும் நிதி மேலாண்மையில் கவனம் செலுத்துதல் போன்ற வழிமுறைகள் மிக முக்கியமானவை. தொழிலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல உதவும் முக்கிய படிகள்:

- சந்தை ஆராய்ச்சி (Market Research): உங்கள் போட்டியாளர்கள் யார், வாடிக்கையாளர்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தொடர்ந்து ஆராயுங்கள்.
- டிஜிட்டல் மார்க்கெட்டிங் (Digital Marketing): நவீன யுகத்தில் தொழில் வளர்ச்சிக்கு சமூக வலைத்தளங்கள் (Social Media) மற்றும் கூகுள் (Google) விளம்பரங்கள் பெரிதும் உதவும்.
- வாடிக்கையாளர் உறவு (Customer Relationship): வாடிக்கையாளர்களிடம் நல்லுறவைப் பேணி, அவர்களின் கருத்துக்களை (Feedback) ஏற்றுத் தொழிலை மேம்படுத்துங்கள்
- தொடர் கற்றல் மற்றும் மேம்பாடு (Continuous Learning): உங்கள் துறையில் உள்ள புதிய மாற்றங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை உடனுக்குடன் கற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துங்கள்.
- நிர்வாகத் திட்டமிடல்: முதலீடு, வரவு-செலவு கணக்குகளைத் துல்லியமாக வைத்துக்கொள்வது நீண்டகால வெற்றிக்கு வழிவகுக்கும்.

தமிழ்நாடு அரசு, தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டவும் நிதியுதவி பெறவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கூடுதல் விவரங்களுக்கு தமிழ்நாடு அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை இணையதளத்தைப் பார்வையிடலாம்.

ஆண்டு சந்தா உறுப்பினர்கள் 2026-27ம் ஆண்டிற்கான சந்தா தொகையை விரைவில் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்

Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account

Name
**Sourashtra Chamber of Commerce**
Bank
**State Bank of India**
Acct. No.
**30134805614**
Branch
**Madurai City**
IFSC
**SBIN0011544**

## திருக்குறள்


**கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்**
**எற்றா விழுமந் தரும்**

**பொருள்:** (செய்யப் புகுந்துவிட்ட ஒரு காரியத்தின்) முடிவு காண அதைப் பூர்த்தி செய்வதுதான் ஆண்மை. இடையில் காரியத்தை நிறுத்திவிடுவது அக்காரியம் முடியாமற் போகக் கூடியபடி தீராத துன்பங்களை உண்டாக்கிவிடும்.

அதிகாரம் 67 | வினைத்திட்பம் (காரியத்தில் உறுதி) | அங்கவியல்

# இந்தியாஹேண்ட்மேட்

## இந்தியாவின் கைவினைத்தொழில்கள் மேம்பாட்டிற்கான டிஜிட்டல் தளம்




இந்தியாவின் பாரம்பரிய கைத்தறி, கைவினைப் பொருட்களை இணையவழிப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கும் நோக்கில் ‘இந்தியாஹேண்ட்மேட்‘ www.indiahandmade.com எனும் பிரத்யேக டிஜிட்டல் சந்தை தளம் செயல்பட்டு வருகிறது. நுகர்வோருடன் கைவினைக்கலைஞர்களையும் நெசவாளர்களையும் நேரடியாக இணைக்கும் இந்த தளம், இடைத்தரகர்கள் இல்லாத சூழலை உருவாக்கி அவர்களுக்கு நியாயமான வருவாயை உறுதி செய்கிறது. கிராமப்புற மக்களின் வாழ்வாதார மேம்பாடு, கலாச்சாரப் பாதுகாப்பு ஆகியவற்றை முன்னிறுத்திச் செயல்படும் இந்த இணையதளத்தில் புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள், “ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு’ திட்டத்தின் கீழ் வரும் பிராந்திய கைவினைப் பொருட்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டு உலகளாவிய சந்தை வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இந்தியப் பாரம்பரிய கைவினைத் துறையில் சுமார் 64.66 லட்சம் கைவினைக்கலைஞர்களும் நெசவாளர்களும் ஈடுபட்டு வாழ்வாதாரம் பெற்று வருகின்றனர். குறிப்பாக, இத்துறையில் பெண்களின் பங்களிப்பு மிக அதிகமாக உள்ளது. கைத்தறி நெசவாளர்களில் 71 சதவீதத்தினரும் மொத்த கைவினைக்கலைஞர்களில் 64 சதவீதத்தினரும் பெண்கள் ஆவர். இத்தகைய சூழலில், டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் பாரம்பரியத் தொழில்களை இணையவழி வர்த்தகத்துடன் இணைப்பது கிராமப்புற மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மகளிர் மேம்பாட்டிற்கும் அடித்தளமாக அமைகிறது. மத்திய ஜவுளி அமைச்சகத்தின் கீழ் உள்ள டிஜிட்டல் இந்தியா கார்ப்பரேஷன் அமைப்பால் 2023-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த தளம், இந்தியக் கைவினைக்கலைஞர்களின் தயாரிப்புகளுக்கு நாடு தழுவிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்துள்ளது.

இந்த இணைய தளம் வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடையே நம்பகமான வணிகச் சூழலை உருவாக்குகிறது. நெசவாளர்கள் தங்களின் தயாரிப்புகளுக்கு எவ்வித கூடுதல் தொகையும் செலுத்தத் தேவையில்லை என்பதோடு, நுகர்வோருக்கு இலவச விநியோக வசதி, பாதுகாப்பான பணப் பரிவர்த்தனை முறைகள், பொருட்களை எளிதாக திருப்பி அனுப்பும் வசதி ஆகியவை வழங்கப்படுகின்றன. இதனால் வாடிக்கையாளர்கள் போட்டி விலையில் தரமான பொருட்களைப் பெற முடிகிறது. மேலும், சிறு கைவினைக்கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஜிஎஸ்டி பதிவு இல்லாத விற்பனையாளர்களும் தங்களின் மாநிலத்திற்குள் மட்டும் வர்த்தகம் செய்யும் வகையில் சேர்க்கை அடையாள எண் மூலம் இதில் எளிதாகப் பதிவு செய்துகொள்ளலாம்.

இத்தளத்தில் ஆடைகள், வீட்டு அலங்காரப் பொருட்கள், ஓவியங்கள், மரச்சாமான்கள், இசைக்கருவிகள், ஆபரணங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான கைவினைப் பொருட்கள் கிடைக்கின்றன. இவற்றுடன் பஷ்மினா சால்வைகள், டோக்ரா கலைப் பொருட்கள் போன்ற புவிசார் குறியீடு பெற்ற தனித்துவமான தயாரிப்புகளும், டங்கைல் புடவைகள், பனாரஸ் பட்டு, சந்தேரி பட்டு, சுடுமண் சிற்பங்கள் போன்ற ‘ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு’ திட்டப் பொருட்களும் பிராந்திய அடையாளங்களுடன் விற்பனை செய்யப்படுகின்றன. சந்தம்ஸ், தஸ்த்கார் கிராஃப்ட், வில்லேஜஸ் கிராஃப்ட் போன்ற உள்நாட்டு நிறுவனங்களின் கீழ் நூற்றுக்கணக்கான கைவினைக்கலைஞர்கள் தயாரிக்கும் பொருட்கள் இந்த டிஜிட்டல் சந்தை மூலம் விற்கப்படுகின்றன.

தற்சார்பு இந்தியா இலக்கை எட்டும் நோக்கில் 60 லட்சத்திற்கும் அதிகமான கைவினைக்கலைஞர்களை இந்த தளத்தில் இணைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. டிஜிட்டல் இந்தியா கொள்கையின்படி, கைவினைத் தொழிலை வெறும் வாழ்வாதாரமாக மட்டும் பார்க்காமல் நாட்டின் கலாச்சார அடையாளமாகப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் உன்னதப் பணியை ‘இந்தியாஹேண்ட்மேட்’ தளம் மேற்கொண்டு வருகிறது.

## அஞ்சலக சேமிப்புக் கணக்கு பரிவர்த்தனை பணி நேரம் நீட்டிப்பு

மதுரையில் மூன்று அஞ்சலகங்களில் சேமிப்புக் கணக்கு பரிவர்த்தனை பணி நேரம் நீட்டிக்கப்பட்டது. இதுகுறித்து மதுரை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் அலு வலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மதுரை தலைமை அஞ்சலகம், தல்லாகுளம் தலைமை அஞ்சலகம், அரசடி தலைமை அஞ்சலகம் ஆகியவற்றில் வாடிக்கையாளர்களின் சேமிப்புக் கணக்கு பரிவர்த்தனைகளுக்கான பணி நேரம் ஜூலை 1-ஆம் தேதி முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இனி வருகிற நாள்களில் வாடிக்கையாளர்கள் தங்கள் சேமிப்புக் கணக்கு பரிவர்த் தனைகளை காலை 8 மணி முதல் இரவு 7.15 மணி வரை மேற்கொள் ளலாம்.

வாடிக்கையாளர்களின் வசதியை மேம்படுத்தவும், காத்திருப்பு நேரத்தை குறைக்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது. இதன்மூலம், வாடிக்கையாளர்கள் தங்களுக்கான சேமிப்பு கணக்கு சேவையை எளிதாகக் கையாளலாம் என அதில் குறிப்பிடப் பட்டது.

# MY Bharat - எனது இளைய பாரதம்

'மேரா யுவ பாரத்' (MY Bharat - எனது இளைய பாரதம்) என்பது இளைஞர் மேம்பாடு மற்றும் இளைஞர்கள் தலைமையிலான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இது டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் களப்பணிகளை இணைக்கும் ஒரு தளமாக செயல்படுகிறது.

தேசிய ஒற்றுமை தினமான அக்டோபர் 31, 2023 அன்று இந்த தன்னாட்சி அமைப்பு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தொடங்கப்பட்டது. இது மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும். இதில், 15 முதல் 29 வயது வரை உள்ள இந்திய இளைஞர்களே இணைய முடியும்.

**முக்கிய அம்சங்கள் மற்றும் வாய்ப்புகள்**

- **பயிற்சி வாய்ப்புகள்** (Experiential Learning): நிறுவனங்களில் நேரடிப் பயிற்சி (Internships) மற்றும் வேலைப் பழகுநர் (Apprenticeship) வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.
- **தன்னார்வப் பணிகள்** (Volunteering): ரத்த தானம், தூய்மைப் பணிகள் மற்றும் பேரிடர் மேலாண்மை போன்ற சமூகப் பணிகளில் ஈடுபடலாம்.
- **தலைமைப் பண்பு** (Leadership): தேசிய அளவிலான விவாதங்கள் மற்றும் அரசுத் திட்டங்களில் இளைஞர்கள் பங்கெடுக்க வழிவகை செய்கிறது.
- **டிஜிட்டல் கருவிகள்** (Digital Tools): சுயவிவரக் குறிப்பு (Smart CV) தயாரிக்கும் வசதி மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் வேலைத்திறனை மேம்படுத்தும் வசதிகள் உள்ளன.

இந்தியாவின் இளைய ஆற்றலைப் பயன்படுத்தி, நாட்டின் சுதந்திர தின நூற்றாண்டு ஆண்டான 2047-க்குள் இந்தியாவை வல்லரசாக்குவதே (விக்சித் பாரத்) இதன் முதன்மை நோக்கமாகும்.

# டிஜிலாக்கரில் மின்சாரக் கட்டணங்கள்

## *புதிய வசதியை அறிமுகப்படுத்தியது மத்திய அரசு*

"டிஜிட்டல் இந்தியா' திட்டத்தின் கீழ் இயங்கும் டிஜிலாக்கர் செயலியில், நாடு முழுவதும் உள்ள 68 மின் விநியோக நிறுவனங்கள் மற்றும் மின்சாரத் துறைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், 35 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள லட்சக்கணக்கான மின் நுகர்வோர், தங்கள் மின்சாரக் கட்டணங்களை நேரடியாக டிஜிலாக்கர் செயலி மூலமே பாதுகாப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இனி மின்சாரக் கட்டணங்களை மின்னஞ்சலில் தேடுவதோ, காகித வடிவில் சேமித்து வைப்பதோ அல்லது அலுவலகங்களுக்குச் செல்வதோ தேவையில்லை. பெங்களூரு மின்சார விநியோக நிறுவனம் பி.எஸ்.இ.எஸ். மற்றும் நொய்டா பவர் நிறுவனம் உள்ளிட்ட முக்கிய பொது மற்றும் தனியார் மின் விநியோக நிறுவனங்கள் இதில் அடங்கும். இந்த ஒருங்கிணைப்பு, குடிமக்களுக்குத் தேவையான ஆவணங்களை டிஜிட்டல் முறையில் எளிதாகவும் பாதுகாப்பாகவும் அணுக வழிவகை செய்கிறது. இது இந்தியாவின் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் ஒரு முக்கிய மைல்கல்லாகும்.

# DigiDukaan

# மளிகைக் கடை - ஆன்லைன் கொள்முதல் முறை

'டிஜிடுகான்' (DigiDukaan) என்பது இந்திய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறை (DPIIT) மற்றும் ONDC (Open Network for Digital Commerce) அமைப்பு ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் தொடங்கப்பட்ட ஒரு டிஜிட்டல் கொள்முதல் (Procurement) திட்டமாகும்.

இது வாடிக்கையாளர்கள் பயன்படுத்தும் சாதாரண ஷாப்பிங் ஆப் அல்லது பில்லிங் சாப்ட்வேர் அல்ல. மாறாக, உள்ளூர் மளிகைக் கடைக்காரர்கள் (Kirana Stores) தங்களுக்குத் தேவையான மொத்தப் பொருட்களை (Stock) எளிதாகவும் நேரடியாகவும் வாங்குவதற்கான ஒரு டிஜிட்டல் கட்டமைப்பு ஆகும்.

**டிஜிடுகான் எவ்வாறு செயல்படுகிறது? (How it functions)**

வழக்கமாக மளிகைக் கடைக்காரர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை, கடைக்கு வரும் சேல்ஸ்மேன்கள் மூலமாகவோ அல்லது வாட்ஸ்அப் மூலமாகவோ ஆர்டர் செய்வார்கள். இதனால் அவர்களுக்குச் சரியான விலை மற்றும் சலுகைகள் தெரிவதில்லை. டிஜிடுகான் இந்த முறையை பின்வருமாறு மாற்றுகிறது:

- **ஒரே நெட்வொர்க் (ONDC Integration):** இது நுஹிம்ளீ நெட்வொர்க்கில் இயங்குவதால், இதற்கு என்று தனியாக ஒரே ஒரு ஆப் கிடையாது. கடைக்காரர்கள் தங்களுக்குப் பொருத்தமான ONDC சார்ந்த B2B செயலிகள் (எ.கா: Qwipo அல்லது Salescode) மூலம் இந்த நெட்வொர்க்கைப் பயன்படுத்தலாம்.
- **நேரடி டிஜிட்டல் ஆர்டர் (Direct Digital Ordering):** கடைக்காரர்கள் தங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களைப் பெரிய பிராண்டுகளிடமிருந்தும் (FMCG Brands), மொத்த வியாபாரிகளிடமிருந்தும் நேரடியாக ஒரே மொபைல் திரையில் பார்த்து ஆர்டர் செய்யலாம்.
- **உள்ளூர் விநியோகம் (Local Fulfilment):** கடைக்காரர் ஆர்டர் செய்தவுடன், அந்தத் தகவல் அந்தப் பகுதியில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு (Distributors) அல்லது மொத்த விற்பனையாளர்களுக்குச் செல்லும். அவர்கள் பொருட்களை நேரடியாகக் கடைக்கே கொண்டு வந்து டெலிவரி செய்வார்கள்.
- **விலை வெளிப்படைத்தன்மை (Price Transparency):** நிறுவனங்கள் வழங்கும் தள்ளுபடிகள் (Offers) மற்றும் உண்மையான விலைகள் கடைக்காரர்களுக்கு நேரடியாகத் தெரிவதால், இடைத்தரகர்களின் தலையீடு இன்றி லாபத்தை அதிகரிக்க முடிகிறது.

இத்திட்டம் தற்போது முதற்கட்டமாக இந்தியாவின் முக்கிய நகரங்களில் (ஹைதராபாத், ஜெய்ப்பூர் போன்ற இடங்களில்) சோதனை முறையில் (Pilot Project) தொடங்கப்பட்டு, படிப்படியாக நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

# மத்திய அரசின் மிக முக்கியமான இரண்டு டிஜிட்டல் வர்த்தகத் திட்டங்களான ONDC மற்றும் GeM பற்றிய முழுமையான விவரங்கள்

## ONDC (Open Network for Digital Commerce)

இது டிஜிடுகான் திட்டத்தின் அடிப்படை நெட்வொர்க் ஆகும். அமேசான் (Amazon) அல்லது ஃபிளிப்கார்ட் (Flipkart) போன்ற ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இல்லாமல், இ-காமர்ஸ் வர்த்தகத்தை முற்றிலும் பொதுவானதாக மாற்றுவதற்காக மத்திய அரசு இதைக் கொண்டுவந்தது.

**இது எப்படிச் செயல்படுகிறது?:** இது யுபிஐ (UPI) போன்றது. யுபிஐ-யில் நீங்கள் கூகுள் பே (Google Pay) ஆப் மூலம் போன்பே (PhonePe) கணக்கிற்குப் பணம் அனுப்ப முடியும். அதேபோல், ONDC நெட்வொர்க்கில் நீங்கள் ஒரு செயலியைப் (எ.கா: Paytm அல்லது Magicpin) பயன்படுத்தி ஆர்டர் செய்தால், அந்த ஆர்டர் மற்றொரு செயலியில் (எ.கா: SellerApp) பதிவு செய்துள்ள உள்ளூர் கடைகளுக்குச் செல்லும்.

**யாரெல்லாம் பயன்படுத்தலாம்?:** சிறிய மளிகைக் கடைகள், உணவகங்கள் (Restaurants), ஆட்டோ/டேக்சி ஓட்டுநர்கள் (எ.கா: நம்ம யாத்ரி ஆப்) மற்றும் சாதாரண வாடிக்கையாளர்கள்.

**முக்கிய நன்மை:** அமேசான், சொமாட்டோ (Zomato) போன்ற பெரிய நிறுவனங்கள் வாங்கும் 20% முதல் 30% வரையிலான கமிஷன் தொகை இதில் கிடையாது. இதனால் கடைக்காரர்களுக்கும் லாபம், வாடிக்கையாளர்களுக்கும் குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கும்.

## GeM (Government e-Marketplace):

இது அரசுத் துறைகளுக்கான பிரத்யேக அமேசான் (Amazon) போன்ற ஒரு ஆன்லைன் சந்தை ஆகும். அரசு அலுவலகங்களுக்குத் தேவையான பேனா, பென்சில் முதல் கணினிகள், கார்கள் வரை அனைத்தையும் வாங்குவதற்கு இந்தத் தளம் பயன்படுத்தப்படுகிறது.

**இது எப்படிச் செயல்படுகிறது?:** மத்திய/மாநில அரசுத் துறைகள் தங்களுக்குத் தேவையான பொருட்களை வெளிச்சந்தையில் வாங்கக் கூடாது. அவர்கள் **GeM** அதிகாரப்பூர்வ இணையதளத்தில் மட்டுமே வாங்க வேண்டும். நீங்கள் ஒரு சிறு தொழில் நடத்துபவராக இருந்தால், உங்களது பொருட்களை இந்தத் தளத்தில் பட்டியலிடலாம் (List செய்யலாம்).

**யாரெல்லாம் பயன்படுத்தலாம்?:** உத்யம் பதிவு (Udyam Registration) பெற்றுள்ள சிறு குறு தொழிலதிபர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள்.

**முக்கிய நன்மை:** அரசு டெண்டர்களில் எளிதாகப் பங்கேற்கலாம். லஞ்சம் அல்லது இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக அரசுத் துறைகளுக்கு உங்களது பொருட்களை விற்று, அதற்கான பணத்தை நேரடியாக உங்களது வங்கி கணக்கில் பெறலாம்

# 9 காரட் தங்க நகை

ஒரு சவரன் தங்க நகை வாங்க வேண்டும் என்றால், ரூ. 1.25 லட்சம் செலவாகும் என்ற நிலைக்கு தங்கம் விலை நிலவரம் உள்ளது. இதனால், தற்போது 9 மற்றும் 18 காரட் தங்க நகைகள் அதிகம் விற்பனைக்கு வருகின்றன.

22 காரட் தங்க நகைகளுக்கு மாற்றாக, 9 அல்லது 18 காரட் தங்க நகைகளை வாங்குவதில் சிலருக்கு இன்னமும் தயக்கம் நீடிக்கிறது. ஆனால், நவீன டிசைன்களில், நாள்தோறும் அணிந்து கொள்ள, விதவிதமாக பல டிசைன்ளில் வாங்கி வைத்துக்கொள்ள, விலையும் குறைவு என்பதால் பலரும் தற்போது 9 அல்லது 18 காரட் தங்க நகைகளை வாங்குவதற்கு முன் வருகிறார்கள்.

22 காரட் தங்க நகைகள் வாங்குவதாக இருந்தால் இன்றைய நிலவரப்படி ஒரு கிராம் ரூ. 13,700. அதுவே 9 காரட் தங்கம் ஒரு கிராம் விலை ஜுலை - 3 நிலவரப்படி ரூ. 4800/ - மட்டுமே. அதிகபட்சமாக ரூ. 5000/- முதல் ரூ. 5300 வரை விற்பனையாகிறது. அதுபோல சான்றிதழ் பெற்ற அல்லது ஹால்மார்க் முத்திரையுடன் 9 காரட் ஒரு கிராம் நாணயம் வாங்க வேண்டும் என்றால் அதன் விலை ரூ. 6000/- முதல் ரூ. 7000/- வரை மட்டுமே.

இது குறித்து நகைக் கடைக்காரர்கள் கூறுவது என்னவென்றால், 9 காரட் தங்கம் என்பது 37.5% சுத்த தங்கம் மற்றும் 62.5% செம்பு சேர்த்து தயாரிக்கப்படுகிறது. இது தங்க நகையின் பலத்தைக் கூட்டுகிறது, நெகிழ்ச்சியடைவதால் எளிதாக சேதமடைவதில்லை. விலையும் குறைவு என்பதால் பலரும் வாங்க முன் வருகிறார்கள்.

**9 காரட் வாங்குவதில் சாதகம் என்ன?**

- 22 காரட் தங்கத்தின் விலை அதிகம். அதிகத் தூய்மை கொண்டது, உலகளாவிய விலைகளுடன் தொடர்புடையது.
- 18 காரட் தங்கத்தின் விலை குறைவாக இருக்கும். பெரும்பாலும் வைர ஆபரணங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.
- 9 காரட் தங்கத்தன் விலை கணிசமாகக் குறைவு. அதாவது, ஒரே வடிவமைப்பு மற்றும் எடையுள்ள 22 காரட் தங்க நகைகளின் விலையை விட கிட்டத்தட்ட 40-50 சதவிகிதம் வரை விலை குறைவாக இருக்கும்.

இதனால், கல்லூரி, அலுவலகம் செல்வோர் நாள்தோறும் அணிந்து கொள்ளவும், ஆடைக்கு ஏற்ப பல டிசைன்களில் வாங்கவும் இந்த 9 இல்லது 18 காரட் தங்க நகைகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக 14, 18, 22 காரட் தங்க நகைகளைவிட 9 காரட் தங்க நகைகள் விலைக் குறைவாக இருப்பது மக்களை அதிகம் ஈர்க்கிறது. இதனை வாங்குவது குறித்து முடிவெடுப்பது ஒவ்வொருவரின் தேவையைப் பொருத்தது.

பொதுவாக இரண்டு காரணங்களுக்காக நகை வாங்குவார்கள். ஒன்று அழகாக அணிந்துகொள்ள மட்டும், மற்றொன்று சொத்தாக நகைகளை வாங்கி வைப்பது. எனவே, அழகாக அணிந்துகொள்ள வாங்குபவர்களின் முதல் தெரிவாக 9 காரட் நகை உள்ளது. இதில், மிக நுட்பமான வேலைப்பாடுகள் செய்ய முடியும் என்பதால், பல நுட்பமான டிசைன்களிலும் கிடைக்கிறது.

அதுவே 25 காரட் தங்கம் என்றால், அது மிகவும் மிருதுவானது, டிசைன்கள் செய்ய முடியாது, அன்றாடம் அணிந்துகொள்வதற்கும் ஏற்றதல்ல. அதனை வெறும் நாணயங்கள், தங்கக் கட்டிகளாகத்தான் வாங்குவது சிறந்தது.

எனவே, எவ்வளவு தங்கத்தின் பங்கு குறைகிறதோ, அந்த அளவுக்கு நகைகளின் ஆயுள் காலம் அதிகரிக்கும் என்பதால், பலரும் 9 காரட் தங்க நகைகளை விரும்பி வாங்குகிறார்கள்.

சில தங்க நகைக் கடைகள் செய்கூலி, சேதாரமும் குறைவாகவே கணக்கிடுகிறார்கள். தங்கம் விலை லட்சங்களைத் தொட்டிருக்கும் நிலையில், 9 காரட் தங்க நகைகள் பலருக்கும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளன.

Organised by

SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI

திட்டமிடுவோம் !
செயல்படுவோம் !!
சிகரம் தொடுவோம் !!!

அவோ ! மிளோ !! ஹொரடோ !!!

# SITCON

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

August 7, 8 & 9 & 15, 16, 2026

# மாநாடு வர்த்தக கண்காட்சி மலர் வெளியீடு



## மாநாட்டு நிகழ்ச்சிகள்

ஆகஸ்ட் 15, சனிக்கிழமை
மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

ஆகஸ்ட் 16, ஞாயிறு
காலை 9.00 மணி முதல் இரவு 9.30 மணி வரை

**தமிழ்நாடு சேம்பர் ஆப் காமர்ஸ்,**
ஹட்சன் A/c ஹால், காமராஜர் சாலை, மதுரை.

## வர்த்தக கண்காட்சி

ஆகஸ்ட் 7, 8 & 9, 2026
வெள்ளி, சனி, ஞாயிறு

**அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கம்**
காமராஜர் சாலை, மதுரை.
காலை 9.30மணி முதல் இரவு 9.00 மணி வரை

## சிட்கான் 2026 மாநாட்டு மலர் வெளியீடு

MADURAI RUN 2026
Let's Run for Clean Madurai

ஆகஸ்ட் 9, ஞாயிறு, காலை 6 மணி,
காந்தி மியூசியம்,
மதுரை

வணிகம் | தொழில் | முதலீடு | வளர்ச்சி




0452 2629955, 93441 97952, sourashtra.chamber@gmail.com www.sourashtrachamber.org

Organised by

SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI

திட்டமிடுவோம்!
செயல்படுவோம்!
சிகரம் தொடுவோம்!!!

அவோ! மிளோ!! ஹொாடோ!!!

# SITCON

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

August 7, 8 & 9 & 15, 16, 2026


**A/C STALLS**

**STALL FOR 3 DAYS**

**AUGUST 7, 8 & 9, 2026**

**ARUNACHALAM KAMALAMBAL HALL, MADURAI.**


## SITCON 2026 STALL LAYOUT HALL 1





NOTE : LAYOUT IS SCHEMATIC, FINAL DIMENSIONS MAY VARY ON-SITE

**Special Offer For Our SCC Members**
Every Stall Booking You Get Half Page Souvenir Advt **Free**

## SITCON 2026 STALL LAYOUT HALL 2




**AVAILABLE AMENITIES**




**NOTES**
- All Stalls are 6'6" x 6'6"
- Passage with centre barricade ensure smooth visitor flow
- Exit options on Right (Food Court)

SCAN & PAY

**Bank Details for Payment** *All Payment by Cheque / DD / NEFT / RTGS or Demand Draft in favour of*

**SITCON**
State Bank of India,
Branch : SME Branch
A/c No. : 38502195088 IFSC : SBIN0000988

**K.K. DINESH** President
**T.R. MOHANRAM** Imm. Pt. President
**A.B. KUMARESH BABU** General Secretary
**V.V. RAMLAKSHMANJI** Treasurer
**S.G. SRINIVASAN** Jt. Secretary
**T.N. SURIYAPRAKASH** Jt. Secretary
**K.K.DINAKARAN** Jt. Secretary (Acting)

**K.K.KUBENDRAN**
98940 37794
SITCON CHAIRMAN & VICE PRESIDENT

**FOR STALLS BOOKING CONTACTS**

**Co-ordinators**

| | |
|---|---|
| S.S.RAMSUNDAR | 86108 90919 |
| M.M.DHANASEKARAN | 944 340 0857 |

**Team Associate**

| | |
|---|---|
| T.R.Rameshbabu | 8608029290 |
| J.K. Vijayaragavan | 9994647080 |
| J.R.Suresndrakumar | 7667336215 |
| E.R.K.Chetan babu | 98454 06773 |

# கிங்மேக்கர் காமராஜ் பொற்கால ஆட்சி தந்த பெருந்தலைவர்

கர்மவீரர் காமராஜ் அவர்களின் பிறந்தநாள், ஜுலை 15ந் தேதி ஆகும். அவரை நினைவுகூர்ந்து அவர் நாட்டிற்கு ஆற்றிய தொண்டினை இளைய சமுதாயத்தினரிடம் எடுத்துரைப்பது, அவருக்கு நாம் செலுத்தும் சொற்ப நன்றிக்கடன்.

விருதுப்பட்டியில் (இன்றைய விருதுநகர்) 1903ம் ஆண்டு, ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவர், எழுபத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து, தன் உடல், பொருள், ஆவி என அனைத்தையும் நாட்டிற்கு என்று அர்ப்பணித்த மாபெரும் தலைவர், காமராஜ் அவர்கள்.

தியாகி சத்தியமூர்த்தி அவர்களை குருவாக ஏற்றுக் கொண்டு, சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று பல வருடங்கள் சிறை தண்டனை அனுபவித்தவர், இந்த படிக்காத மேதை. நாடு விடுதலை அடைந்த பிறகு 1954ல் முதலமைச்சராக பதவி ஏற்று, பல சாதனைகள் புரிந்தார்.


பாமரனும், சூழ்நிலை காரணமாக உயர்கல்வி கற்க முடியாதவனும், புகழின் உச்சம் தொடலாம் என்பதற்கு உன்னதமான உதாரணம் இந்த உத்தமபுருஷர். மணம் செய்து கொள்ளாமல், குடும்ப வாழ்க்கையையும் தியாகம் செய்து நாட்டிற்காக தவ வாழ்க்கை வாழ்ந்தவர் நம் தவப்புதல்வர்.

தமிழ் வருடப்பிறப்பு, 1954 ஏப்ரல் 13ல் தொடங்கி, காந்தி ஜெயந்தி 1963 அக்டோபர் 2 வரை ஒன்பதரை ஆண்டுகள் அவர் தமிழ் நாட்டை ஆண்ட காலம், ஒரு பொற்காலம். முதல்வரையும் சேர்த்து 8 அமைச்சர்களை மட்டுமே கொண்ட மந்திரி சபையின் மகிமை, எட்டுத்திக்கும் சென்றடைந்தது. கட்சிக்குள், முதல்வர் பதவிக்கு தம்மை எதிர்த்து நின்று தோற்ற சி. சுப்ரமணியம் அவர்களுக்கும், மந்திரிசபையில் இடம் கொடுத்த பெருந்தன்மை, சாணக்கியத்தனம், நாட்டு நலன் ஒன்றே இலக்கு என்ற கோட்பாடு, இவரிடம் காணப்பட்ட அதிசய நற்குணங்கள் ஆகும்.

எளிமையின் இலக்கணமாகத் திகழ்ந்தவர். தமக்குக் கிடைக்காத கல்வி, அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று அரும்பாடுபட்டார். ஆரம்ப பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் என்று ஆயிரக்கணக்கான பாடசாலைகள் நிறுவி இளைய சமுதாயத்திற்கு கல்விக்கண் வழங்கிய வள்ளல். மாணவர்களுக்கு மதிய உணவு என்ற புரட்சிகரமான மனிதநேய சிந்தனையை செயல்படுத்தி, அறிவுப்பசியுடன் வயிற்றுப்பசியையும் தீர்த்துவைத்த தீர்க்கதரிசி.

விவசாயம் காக்க, வாழ்வாதார குடிநீர் பிரச்சனைகள் தீர, பல அணைகள் கட்டிய இருபதாம் நூற்றாண்டின் கரிகால சோழன், இந்த சிவகாமியின் செல்வன். தொழிற்சாலைகளை தொடங்கி வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்த ஆற்றல் அரசர். தமிழ்த்திருநாட்டை பாரதத்தின் இரண்டாம் இடத்திற்கு, உயர்த்திய உயர்ந்த மனிதர்.

காங்கிரஸ் கட்சியின் தேக்க நிலையை உணர்ந்து, தாமாகவே முன்வந்து, முதலமைச்சர் பதவியையும் தியாகம் செய்து, கட்சிப் பணியினை மேற்கொண்டார். அப்போதைய பிரதமர் நேருஜி, இந்த புனித முயற்சிக்கு **காமராஜர் திட்டம்** என பெயர் சூட்டி மகிழ்ந்தார்.



அவரது தூய சேவையை பாராட்டி அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக தேர்ந்தெடுத்து அக்கட்சி அவரை கௌரவித்தது.

நேருஜியின் மரணத்திற்குப் பிறகு, அந்த வெற்றிடத்தை நிரப்பும் சவாலை, லால் பகதூர் சாஸ்திரியை தேர்ந்தெடுத்து சமாளித்தார். துரதிர்ஷ்டவசமாக, சாஸ்திரி 1966ல் அகால மரணமடைந்தார். அதனையடுத்து பிரதமர் பதவிக்கு இந்திரா அவர்களை முன்மொழிந்து, **கிங்மேக்கர்** என்று போற்றப்பட்டார்.

யாரும் எதிர்பார்க்காத விதமாக 1967ல் நடந்த சட்டசபை தேர்தலில், விருதுநகர் தொகுதியில், அவரால் படித்து வளர்ந்த மாணவனிடமே தோற்றார். அந்த தோல்வியால் அவர் நிலைகுலையவில்லை. பிறகு, நாகர்கோவில் பாராளுமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்றார் என்பதே மக்கள் அவர்மேல் வைத்த நம்பிக்கைக்குச் சான்று. திராவிட அரசாங்கம் அமைந்த உடன், வாழ்த்து தெரிவித்து, ஆறு மாதங்கள் வரை ஆட்சியை விமர்சிக்க மாட்டோம் என்ற புதிய சித்தாந்தத்தை, அரசியல் மாண்பை, துவக்கிவைத்தார்.

இவரை தூற்றியவர்கள் – ராஜாஜி தொடங்கி பல முன்னணித் தலைவர்கள் வரை, பின்னாளில், காமராஜ் புகழ்பாடும் வியக்கத்தக்க சூழ்நிலை உண்டானது என்பது இவரது தியாகத்திற்கு கிடைத்த வெகுமதி.

ஓர் அக்டோபர் திங்கள் 2ம் நாள் (1963) முதல்வர் பதவியை துச்சமென மதித்துத் துறந்தார். மற்றொரு அக்டோபர் திங்கள் 2ம் நாள் (1975) தமது இன்னுயிரை துறந்து, தான் ஓர் அப்பழுக்கற்ற காந்தியவாதி என்பதை மரணத்திலும் நிரூபித்தவர், இந்த காலா காந்தி.

தொடர்ந்து ஒன்பதரை ஆண்டுகள் ஆட்சி செய்து, இதுவரை முறியடிக்கப்படாத சாதனைக்குச் சொந்தக்காரரும், தேர்தல் வாக்குறுதிகளில் மாற்றுக்கட்சியினரும் கூட **காமராஜ் ஆட்சி** அமைப்போம் என்று முழங்கும் வண்ணம் முன்னுதாரண முதல்வராக இருப்பதும், இவரை எதிர்த்து ஆட்சிக்கு வந்த கட்சிகளே இவரது பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாள் என அறிவித்து கொண்டாடி வருவதும் இவருக்கே உரித்தான சிறப்பு. நவபாரதத்தின் நவரத்தினமான பாரத ரத்னா காமராஜ் புகழ் ஓங்குக.

*– வீரஜா*

# ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் ஜூலை மாத தொழில் வர்த்தக கூட்டம்



சிறப்பு விருந்தினர்: திரு. அறிவழகன் அருள்



கௌரவ விருந்தினர்: திரு. எம். சூரிய வீரபத்திரன்

ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் ஜூலை மாத தொழில் வர்த்தக நிகழ்ச்சி, அறிவுசார் சொத்துரிமை பிரச்சனைகளை தீர்க்கும் வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு என்கிற தலைப்பில் கடந்த 07.07.2026ம் தேதி அன்று மாலை 6 மணிக்கு சேம்பர் – மேஃபிளவர் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது குறித்து விளக்கமளிக்க, சிறப்பு விருந்தினராக வணிகச் சட்ட வழக்கறிஞர் திரு. அறிவழகன் அருள் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். ஜிஎஸ்டி பிரச்சனைகள், காப்புரிமை, சட்ட ஆவணச் சிக்கல்கள், நிறுவனப் பதிவு போன்ற பல்வேறு தகவல்களை இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து, வங்கியும் வணிகர் நலனும் என்கிற தலைப்பில் இரண்டாவது நிகழ்ச்சி நடைபெற்றது. இது குறித்துப் பேச, கௌரவ விருந்தினராக இக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியின் கிளை மேலாளர் திரு. எம். சூரிய வீரபத்திரன் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். இதில், வங்கிகள், வணிகர்களின் நலனுக்காக எவ்வாறு செயல்படுகின்றன. வணிகர்கள் வங்கிகளை அணுகும் முறைகள், வங்கிகளின் செயல்பாடுகள் போன்ற பல்வேறு தகவல்களைத் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினர்கள் இருவருக்கும் சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் பலர் தங்களின் சந்தேகங்களை கேட்டறிந்தனர். அங்கத்தினர்கள் பலர் கலந்த கொண்ட இந்த நிகழ்வில், சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி தெரிவித்து நிறைவு செய்தார்.

## இதழ் வெளியீடு



ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் மாத வணிக இதழ் லாப் ஸமாச்சார் ஜூலை இதழை மதுரை ஸௌராஷ்ட்ர சபாவின் பொறுப்பு தலைவரும், சேம்பர் ஆயுட்கால உறுப்பினருமான திரு. ஆர்.ஆர். பாஸ்கர் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இதில் சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் மற்றும் நிர்வாகிகளும், ஸௌராஷ்ட்ர சபா நிர்வாகிகளும் உடன் இருந்தனர்.

## குறு, சிறு தொழில் முனைவோர் கூட்டம்



மதுரை மாவட்ட தொழில் மையம் சார்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கான சிறப்புக் கூட்டம் கடந்த ஜுன் 17ம் தேதி அன்று மதுரை மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கான அழைப்பினை ஏற்று, நமது சேம்பர் சார்பாக, தலைவர் திரு. K.K. தினேஷ் மற்றும் அரசு தொடர்பு குழு ஒருங்கிணைப்பாளர் திரு. N.S. பிரேம் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். கோரிக்கையும் அளித்தனர்.




Published by : K.K. Gnana Prabhakaran on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : K.R. Ramalingam @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : K.K. Gnana Prabhakaran

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**

---

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj**

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*



## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

---

## VIGNESH GRAPHICS

*All Kinds of Printing Solution*



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

**Head Office :** 79-A, South Marret Street, Madurai - 625 001.

**Branch :** No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

**Branch :** Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

---



விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!

## ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்

91506-00904, 99940-18805, 78128-19162

கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.

SINCE-1993 · 01-07-1993 · 31 Years · 2023 · SVLS

வெள்ளி விழா கண்ட நிறுவனம்

### விஜயலெட்சுமி DTP& ஸ்கிரீன்

அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்

- தினசரி & கட்டிங் மாத காலண்டர்
- 12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர்
- தமிழ் டைரி ஆங்கில டைரி
- 30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்
- 20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை
- பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY
- விபூதி கவர் 7 DAYS DELIVERY
- சாமி படம் வுட்லேமினேசன்
- ஸ்கூல் லேபிள்



நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!

Cell : 98421-18873,98428-18873

R.R. பாலகுமார்

R.R. குபேந்திரன்

R.R. பிரேம்குமார்

e.mail : svlsmadurai@gmail.com

Printed Matter / Book Post

Date of Posting : 20.07.2026 / BPC MDU
Date of Publication 20th of Every Month


**Kuttuva Silicates (P) Ltd.,**

KSPL,Madurai

5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846



Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid

**வேல் மருத்துவமனை**
**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

नवीन एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY
सत्यमेव जयते

தென் தமிழகத்தின்
**நம்பர் 1**
சோலார் நிறுவனம்



Prakash Green Energy
Providing Perfect Solar Solutions

வீடுகளுக்கு
78000 ரூ
அரசு மானியமாக பெற்றுத் தரப்படும்

Premium Quality
30+ Years Warranty
100 % Guarantee

**அதிக மின் கட்டணம் செலுத்துகிறீர்களா ?**

உங்கள் வீடு, வணிக கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அதிக மின் கட்டணம் செலுத்துவதை தவிர்த்திடுவீர்

MSME
TANGEDCO

வங்கி கடன் வசதியும் உண்டு. வட்டி விகிதம் 6.5% முதல்
+91 63749 01500
support@prakashgreenenergy.com
www.prakashgreenenergy.com
HEAD OFFICE:
14R, N.S Konar Street,
Jaihindpuram,Madurai - 625011





*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com